# NEL PORTAL COMMUNITY CONTRIBUTIONS
# இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தல் தளத்தின் சமூகப் பங்களிப்பு

## நடவடிக்கைகளை நிரப்புவதற்கான மாதிரிப் படிவமும் வழிகாட்டுக் குறிப்புகளும்

உங்கள் அனைவரையும் இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தல் சமூகம் வரவேற்கிறது. இத்தளத்தில் நீங்கள் உங்களுடைய கற்றல் நடவடிக்கைகளைப் பகிர்ந்துகொள்ள ஆர்வம் காட்டியதற்கு மிக்க நன்றி! பகிர்வுகளை வடிவமைக்கச் சில வழிகாட்டுக் குறிப்புகளும் மாதிரிப் படிவமும் கீழே உங்கள் பயன்பாட்டிற்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

உங்கள் மாதிரி வரைவை நாங்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறோம். இதன்வழி  கருத்துக்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வதுடன் அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளவும் முடியும்.

## ஒட்டுமொத்த வழிகாட்டுக் குறிப்புகள்

1. நீங்கள் பகிர்ந்துகொள்ளும் நடவடிக்கைகள் இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தல் பணிச்சட்டத்தின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். இந்த நடவடிக்கைகள் iTeach பணிச்சட்டத்தின் கோட்பாடுகளுக்கும், கற்றல் நோக்கங்களுக்கும், கற்றல் திறன்களுக்கும் தொடர்புள்ளதாக இருத்தல் வேண்டும்.

    நீங்கள் பின்வரும் வளங்களைப் பார்க்கலாம்:

    அ) **இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தல்** – சிங்கப்பூர் பாலர் பள்ளிகளுக்கான பாடக்கலைத்திட்டப் பணிச்சட்டம்

    ஆ) **இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தல்** – கல்வியாளர்க்குரிய வழிகாட்டி

    இ) **இளம் மாணவர்களின் கற்றல் பண்புகளைப்**

**பேணி வளர்த்தல் –** பாலர் பள்ளிகளுக்கான பாடத்திட்டப் பயிற்றுவளங்கள்

2. தாய்மொழி நடவடிக்கைகளைப் பகிர்ந்துகொள்ள விரும்புபவர்கள் பின்வருவனவற்றையும் பார்க்க வேண்டும்.

   அ) **இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தல் –** சிங்கப்பூர் பாலர் பள்ளிகளுக்கான பாடக்கலைத்திட்டம் – தாய்மொழிகளுக்கான பணிச்சட்டம்

   ஆ) **இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தல் –** கல்வியாளர்க்குரிய தாய்மொழி வழிகாட்டி

3. உங்களது வரைவுகளைச் சுருக்கமாக வைத்துக்கொள்ளவும் (4 பக்கங்களுக்குள் இருத்தல் வேண்டும்).

4. அனுமதி பெற்ற படங்களை மட்டும் பயன்படுத்துங்கள். இணையத்திலிருந்து எடுக்கப்படும் படங்களுக்குப் பதிப்புரிமை குறித்துச் சிக்கல்கள் ஏற்படலாம். அதனால், அப்படங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.

பரிந்துரைக்கப்பட்ட மாதிரிப் படிவம்

# நடவடிக்கையின் தலைப்பு

*நீங்கள் உங்கள் நிறுவனத்தின் சின்னத்தையோ பிற அலங்கார கூறுகளையோ இணைக்கலாம்.*

## 1) நடவடிக்கையின் பின்னணி

இந்த நடவடிக்கையைச் செய்வதற்கானச் சூழலைச் சுருக்கமாகக் குறிப்பிடவும். இக்குறிப்பு கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்குள் மட்டுமே அமைய வேண்டுமென்பதில்லை.

- நடவடிக்கை ஏன் நடத்தப்பட்டது?
- நடவடிக்கை எப்போது நடத்தப்பட்டது?

- எந்த நிலை மாணவர்களுக்காக இந்த நடவடிக்கை நடத்தப்பட்டது**?** (மழலையர் வகுப்பு இரண்டாம் ஆண்டு**,** பாலர் பள்ளி முதலாம் ஆண்டு அல்லது பாலர் பள்ளி இரண்டாம் ஆண்டு)

## 2) கற்றல் நோக்கங்கள்

*(குறிப்பு: அத்தியாயம் 4-ஐ பாருங்கள்: இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தல் பணிச்சட்டத்தின் கற்றல் திறன்கள் உங்களுடைய கற்றல் நோக்கங்கள் கற்றல் குறிக்கோள்களோடு பொருந்தியிருக்கின்றனவா?)*

இந்தப் பிரிவில் நடவடிக்கையின் கற்றல் நோக்கங்களைக் குறிப்பிடவும்.

இந்த நடவடிக்கையின்மூலம் பிள்ளைகளுக்குக் கீழ்க்காணும் வாய்ப்புகள் வழங்கப்படும்:

- ............
- ............

## 3) நடவடிக்கையின் படிநிலைகள்

*(குறிப்பு: அத்தியாயம் 3-ஐ பாருங்கள்: இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தல் பணிச்சட்டத்தின் iTeach கோட்பாடுகள் – iTeach கோட்பாடுகளில் எந்தக் கேட்பாடுகள் உங்களுக்கு வழிகாட்டிகளாக அமைந்தன? (இதைப் படிப்பவர்களுக்குத் தெரிவியுங்கள்!)*

கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை விளக்குவதற்கு நடவடிக்கையின் 3 முக்கிய படிநிலைகளை மட்டுமே குறிப்பிடவும்:

- ஆசிரியர் என்ன செய்தார்? அதற்கான காரணங்கள் யாவை?
- பிள்ளைகள் என்ன செய்தார்கள்? பிள்ளைகள் கற்றுக்கொண்டார்களா?
- யாரெல்லாம் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்? அவர்கள் எவ்வாறு ஈடுபட்டிருந்தனர்?
- பிள்ளைகளுக்கும் மற்றவர்களுக்கும் நடவடிக்கையின் பின்னர் ஏற்பட்ட உணர்வுகள் யாவை?

அ) நடவடிக்கையின் அறிமுகம் (எ.டு: சீனப்புத்தாண்டு மரபுகளை அறிமுகஞ் செய்தல்)

ஆ) முக்கிய நடவடிக்கை

இ) நடவடிக்கையின் நிறைவு

## 4. நடவடிக்கையின் நிறைவு

நடவடிக்கையின் கூறுகள் எவ்வாறு இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தல் பணிச்சட்டத்தை ஒட்டி அமைந்துள்ளன என்பதைச் சுருக்கமாகக் கூறவும். மேலும், இந்நடவடிக்கையைப்பற்றிப் பிள்ளைகளும் பெற்றோர்களும் சொன்ன கருத்துகளை நீங்கள் பகிர்ந்துகொள்ளலாம்.

பகிர்ந்து கொண்டவர்: (பகிர்ந்துகொண்டவரின் முழுப் பெயரையும் வகுப்பின் பெயரையோ/பெயர்களையோ குறிப்பிடவும்)

**குறிப்புகள்**: ஒவ்வொரு படிநிலைகளிலும் இணைக்கப்பட்டுள்ள நிழற்படங்களுக்கு:

- சுருக்கமான தலைப்புகள் வழங்கவும்;
- பிள்ளைகளின் நிழற்படங்களையும் படைப்புகளையும் இணையத்தளத்தில் பயன்படுத்துவதற்குப் பெற்றோரிடம் / பாதுகாவலரிடம் அனுமதியைப் பெறவும்;
- அசல் நிழற்படங்களையோ உரிமையாளரின் அனுமதி பெற்ற நிழற்படங்களையோ மட்டும் பயன்படுத்தவும்; மற்றும்
- உயர்தர நிழற்படங்களைப் பயன்படுத்தவும்.